"மின் அஞ்சல் மூலமாக"

பள்ளிக் கல்வி இயக்ககம்

அனுப்புநர்
முனைவர்.க.அறிவொளி,
பள்ளிக் கல்வி இயக்குநர்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-6

பெறுநர்,
அனைத்து மாவட்ட
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

ந.க.எண். 064404/ஐ/இ1/2023 நாள் 20.12.2023

பொருள் : தேசிய ஆசிரியர் நல நிதியம் – கல்வி உதவித் தொகை – தமிழ்நாடு தொழில் நுட்ப பயிலக பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு 2023–2024 கல்வியாண்டிற்கு படிப்புதவித் தொகை வழங்குதல் – விண்ணப்பங்கள் கோருதல் – தொடர்பாக

பார்வை : அரசாணை (நிலை) எண் 169 பள்ளிக் கல்வி (பக5(2)த் துறை நாள் 03.10.2023

---

பார்வையில் கண்ட அரசாணையில், அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற / பணியில் இருக்கும் போது இறந்த ஆசிரியர்களின் குழந்தைகள் மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு (ஒரு ஆசிரியருக்கு ஒரு குழந்தைக்கு மட்டும்) இணைப்பு – I இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், உயர் கல்வி பயில்வதற்கு கல்வி கட்டணத் தொகை (Tutition fees) தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் உயர்கல்வி கட்டணத் தொகை (Tution Fees) அல்லது ரூ.50,000/– இதில் எது குறைவோ, அத்தொகை மற்றும் தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் கல்வி கட்டணத் தொகை (Tution Fee) அல்லது 15,000/– இதில் எது குறைவோ அத்தொகை தேசிய ஆசிரியர் நல நிதியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து உயர்கல்விக் கட்டணத் தொகையை வழங்கப்பட வேண்டும் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து, தொழில் நுட்பக் கல்வி, பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு 2023–2024 ஆம் கல்வி ஆண்டிற்கு படிப்புதவித் தொகை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ள பார்வையில் கண்ட அரசாணை நகல் மற்றும் (திருத்திய) படிவம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

... 2 ...

இத்தகவலை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து ஆய்வு அலுவலர்களுக்கும் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் உடனடியாக அனுப்பி, சுற்றறிக்கை மூலம் ஆசிரியர் / ஆசிரியைகளுக்கு தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்படிப்புதவித் தொகை பெறும் விவரம் தெரியவில்லை என்று தெரிவிக்காத வண்ணம், எந்த விதமான புகாரும் எழாத வகையில் விழிப்புடன் செயல்படுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் மீண்டும் அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் இத்தொழிற்கல்வி படிப்புதவித் தொகை குறித்து அலுவலக தகவல் பலகையில் விரிவான விளம்பரம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், படிப்புதவித் தொகை பெற விரும்பும் ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ள புதிய விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை முழுமையாக பூர்த்தி செய்து 31.01.2024–க்குள் கீழ்கண்ட முகவரிக்கு நேரிடையாக அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்,
பள்ளிக்கல்வி இயக்ககம்,
பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரி சாலை சென்னை –6

மேலும், விண்ணப்பங்களை அனுப்பும் போது கீழ்கண்ட குறிப்புகளை கண்டிப்பாக கவனத்தில் கொள்ளவேண்டும் என ஆசிரியர்களுக்கு தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

1. விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் (மகன்/மகள்) அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற / பணியிலிருந்து இறந்த ஆசிரியரின் ஒரு குழந்தைக்கு ஒரு முறை மட்டும் கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.
2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள நிறுவனத்தில் தொழிற்கல்வி பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு (MBBS, BDS, B.VSc, BE, B.Sc (Agri), B.Sc (Nursing), Bachelor of Law and Three years Diploma Course) பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.
3. மனுவில் உள்ள அனைத்து கலங்களும் முழுமையான அளவில் சரியாக தமிழில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். சரியாக பூர்த்தி செய்யப்படாத மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (பணிபுரியும் பள்ளி, முகவரி பின் கோடுடன் இருத்தல் வேண்டும்)

4. பெற்றோர்களின் ஆண்டு மொத்த வருமானம் ரூ.7,20,000/- மிகாமல் இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31.01.2024
6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஆசிரியர்கள் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரி சாலை, சென்னை-6 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
7. தொழிற்கல்வி படிப்பில் கடைசியாக தேர்வெழுதிய மதிப்பெண் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. தந்தை அல்லது தாய் பணியின் விவரம் மற்றும் அவர்களின் ஊதிய சான்று விபரங்களை கண்டிப்பாக விண்ணப்பத்தில் உள்ள கலத்தில் பூர்த்தி செய்திருக்க வேண்டும்
9. தந்தை அல்லது தாய் ஆசிரியராக பணிபுரிந்தால் / பணிபுரிந்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்
10. ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் / இறந்து போன ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இப்படிப்புதவித் தொகை பெற தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.
11. ஆசிரியரல்லாத பணியாளர்கள் விண்ணப்பிக்கக் கூடாது.
12. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்பிக் கடைசி தேதியான 31.01.2024-க்குபின் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்கப்படமாட்டாது.

இணைப்பு – அரசாணை நகல் / படிவம்

இயக்குநருக்காக,

21.12.2023

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும்/ஓய்வு பெற்ற மற்றும் பணியிலிருக்கும் போது இறந்த ஆசிரியர்கள் மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர்களின் உயர்கல்வி பயிலும் குழந்தைகளுக்கான கல்வி கட்டணத் தொகை (Tution Fee) ரூ.50,000/- வரை உயர்த்தி வழங்கி ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி[பக5(2)]த் துறை**

**அரசாணை (நிலை) எண். 169**

**நாள் 03.10.2023**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**
**சோபகிருது வருடம், புரட்டாசி 16**

**படிக்கப்பட்டவை :-**

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 01.03.2023-ம் நாளிட்ட செய்தி வெளியீட்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு
2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித நக.எண். 064404/ஐ/இ1/2023, நாள். 25.07.2023

--------

**ஆணை :-**

தமிழகத்தில், அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்கள் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியை கருத்தில் கொண்டு தொழில் நுட்பக் கல்வி, பட்டப் படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பயில அவர்தம் குழந்தைகளுக்கு ஆசிரியர் நல நிதியிலிருந்து ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் நிதியுதவியை உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

**"உயர்கல்வி பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான கல்விச் செலவு ரூ.50,000/- வரை உயர்த்தி வழங்கப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதத்தில், ஒவ்வொரு கல்வியாண்டிலும் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற / பணியில் இருக்கும்போது இறந்த ஆசிரியர்களின் குழந்தைகள் மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பிற்கு ரூ.5,000/-ம், பட்டயப்படிப்பிற்கு ரூ.2,500/-ம் கடந்த 2021-2022-ம் கல்வியாண்டுவரை வழங்கப்பட்டு வந்த நிலையில், பட்டப்படிப்பிற்கு ரூ.10,000/-ஆகவும், பட்டயப்படிப்பிற்கு ரூ.5,000/- ஆகவும் உயர்த்தி 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டு வந்த நிலையில், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தி 2023-2024-ஆம் கல்வியாண்டு முதல் ஆசிரியர்களின் குழந்தைகள் (ஒரு ஆசிரியருக்கு ஒரு குழந்தைக்கு மட்டும்) உயர் கல்வி பயில்வதற்கு கல்வி கட்டணத் தொகையாக (Tuition fees) ரூ.50,000/-ம் தொழிற்கல்வி பட்டயப்படிப்பிற்கு ரூ.15,000/-ம் வழங்குவதற்கான நிபந்தனைகளைத் தெரிவித்து அதனடிப்படையில் தகுதி

வாய்ந்த ஆசிரியர்களின் குழந்தைகளை தெரிவு செய்ய மாநில அளவில் குழு அமைக்க அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று இவ்வரசாணையின் இணைப்பு-I-இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் இணைப்பு-II-இல் குறிப்பிடப்பட்டுள்ள மாநிலத் தேர்வுக்குழு தெரிவு செய்யும் தகுதியுள்ள ஆசிரியர்களின் உயர்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்விக் கட்டணத் தொகை (Tution Fee) வழங்க பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தொழிற்கல்வி பட்டப்படிப்புப் பயில, கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் உயர்கல்வி கட்டணத் தொகை (Tution Fee) அல்லது ரூ.50,000/-இதில் எது குறைவோ, அத்தொகை மற்றும் தொழிற்கல்வி பட்டயப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் கல்வி கட்டணத் தொகை (Tution Fee) அல்லது ரூ.15,000/-இதில் குறைவோ அத்தொகை தேசிய ஆசிரியர் நல நிதியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து மட்டுமே உயர்கல்விக் கட்டணத் தொகையை வழங்கப்பட வேண்டும் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.264/A.D.S(G.K.T)/23, நாள். 01.09.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை -15.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை(வடக்கு/தெற்கு/கிழக்கு)
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

**நகல்**:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,சென்னை -9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மைச் செயலாளர், சென்னை-9.
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
நிதி(கல்வி-II / வ,செ,பொது-I/II/வ.வ-I)த் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (வ.செ.)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/10/23

அரசு சார்புச் செயலாளர்.

3.10.2023

**அரசாணை (நிலை) எண்.169, பள்ளிக்கல்வி(பக5(2))த் துறை, நாள். 03.10.2023,**

**இணைப்பு-I**

| வ. எண். | நிபந்தனைகள் |
|---|---|
| 1. | விண்ணப்பங்கள் வாயிலாக அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும், ஓய்வு பெற்ற மற்றும் பணியிலிருந்து இறந்த ஆசிரியரின் ஒரு குழந்தைக்கு தொழிற்கல்வி பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு [MBBS, BDS, B.VSc, BE, B.Sc (Agri), B.Sc (Nursing), Bachelor of Law and Three years Diploma Course] பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும். |
| 2. | ஒவ்வொரு கல்வியாண்டும் தேசிய ஆசிரிய நல நிதி திட்டத்தின் கீழ் ஆசிரியர் தின கொடி விற்பனை மூலம் பெறப்படும் நிதியின் மூலம் ஆசிரியர்களின் குழந்தைகள் பயன்பெறுவர். |
| 3. | அரசாணை (நிலை) எண். 161, பள்ளிக் கல்வித் துறை, நாள்.20.05.1998-இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தொழிற்கல்வி, பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பயிலவிருக்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். |
| 4. | பெற்றோர் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 7,20,000/- இருக்க வேண்டும். |
| 5. | ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் அதிகப்படியாக ஆசிரியர்களின் பிள்ளைகள் பயன்பெறும் வகையில் உயர்கல்வி பயிலும் மாணவருக்கு ஒரு ஆண்டு மட்டும் அந்த மாணவன் முதலாம் ஆண்டு தேர்ச்சி பெற்றவுடன் கல்வி கட்டணத்தொகை வழங்கப்படும். |
| 6. | மாணவர்களை தெரிவு செய்யும்போது தாய் / தந்தையை இழந்த மாணவர்களுக்கு 20% விகிதத்திலும், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு 10% விகிதத்திலும் மற்றும் SC / ST வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 20% விகிதத்திலும், மற்றும் மாணவிகளுக்கு 30% விகிதத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். |
| 7. | ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் நல நிதியில் இருப்பில் உள்ள தொகையின் அடிப்படையில் மட்டும், மாநில தேர்வுக் குழுவினால் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை ஒதுக்கீடு செய்து வழங்கப்படும். |
| 8. | மாநிலத் தேர்வுக் குழுவின் முடிவுகளே இறுதியானதாகும். |
| 9. | ஒவ்வொரு கல்வி ஆண்டிலும், ஜுன் முதல் வாரத்தில் விண்ணப்பங்கள் சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வழியாகவோ அல்லது நேரடியாக பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கோ தபால் வழியாக பெறப்பட்டு தகுதிவாய்ந்த குழந்தைகளுக்கு கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும். |

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

3.10.2023

பிரிவு அலுவலர்.

3.10.2023

அரசாணை(நிலை)எண்.169, பள்ளிக்கல்வி(பக5(2))த் துறை, நாள்.03.10.2023

## இணைப்பு-II

## மாநிலத் தேர்வுக்குழு

| வ. எண். | குழு உறுப்பினர்கள் | பதவி |
|---|---|---|
| 1 | இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி) பள்ளிக்கல்வி இயக்ககம் | தலைவர் |
| 2 | இணை இயக்குநர் (நிருவாகம்), தொடக்கக் கல்வி இயக்ககம். | உறுப்பினர் |
| 3 | இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்), பள்ளிக்கல்வி இயக்ககம். | உறுப்பினர் |
| 4 | துணை இயக்குநர் (நிருவாகம்) தொடக்கக் கல்வி இயக்ககம் | உறுப்பினர் |
| 5 | நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் ,பள்ளிக் கல்வி இயக்ககம். | உறுப்பினர் |

காகர்லா உஷா.
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

3.10.2023

பிரிவு அலுவலர்.

3.10.2023

தேசிய ஆசிரியர் நல நிதி நிறுவனம், தமிழ்நாடு

தொழிற்கல்வி படிப்புதவித் தொகை விண்ணப்ப படிவம்

202 ………………… 202…………………

(தொழிற் கல்வி படிப்புகளான பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் பல்துறை தொழிற் நுட்பக் கல்லூரி பட்டயப் படிப்புகளுக்கு மட்டும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர்<br>(மாணவன் / மாணவி ) | | |
| | (அ) | தாய் / தந்தை இழந்தவரா ?<br>(ஆம் எனில் இறப்புச் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| | (ஆ) | மாற்றுத் திறனாளியா ?<br>(ஆம் / இல்லை) (ஆம் எனில் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| | (இ) | இனம் (OC / BC / MBC / SC / ST)<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| 2. | விண்ணப்பதாரரின் தந்தையின் பெயர் | | |
| | (அ) | தந்தை பணியாற்றும் / பணிபுரிந்த பள்ளியின் பெயர் (வேறு பணியில் இருப்பின் அன்னாரின் பணி விவரத்தை குறிப்பிடுக) | |
| | (ஆ) | தந்தையின் மாதாந்திர ஊதியம் / ஓய்வூதியம்<br>(ஊதியச் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| | அடிப்படை ஊதியம் (Basic Pay) | | |
| | அகவிலைப்படி (D.A) | | |
| | வீட்டு வாடகைப்படி (H.R.A) | | |
| | மருத்துவப்படி (M.A) | | |
| | இதர படி (O.A) | | |
| | மொத்தம் | | |
| 3. | விண்ணப்பதாரரின் தாயின் பெயர் | | |
| | (அ) | தாய் பணியாற்றும் / பணிபுரிந்த பள்ளியின் பெயர் (வேறு பணியில் இருப்பின் அன்னாரின் பணி விவரத்தை குறிப்பிடுக) | |
| | (ஆ) | தாயின் மாதாந்திர ஊதியம் / ஓய்வூதியம் | |

| | | | |
|---|---|---|---|
| | | (ஊதியச் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| | அடிப்படை ஊதியம் (Basic Pay) | | |
| | அகவிலைப்படி (D.A) | | |
| | வீட்டு வாடகைப்படி (H.R.A) | | |
| | மருத்துவப்படி (M.A) | | |
| | இதர படி (O.A) | | |
| | மொத்தம் | | |
| 4. | தந்தை, தாய் ஆகிய இருவரின் மொத்த ஆண்டு வருமானம் (நிலச் சொத்து மூலமும் மற்றும் இதர வழிகளிலிருந்து வரும் வருமானங்கள் உட்பட)<br><br>(இதர வருமானங்கள் ஊதியம் நீங்கலாக) | | |

| | |
|---|---|
| குறிப்பு | 1. நிலச் சொத்து இதர சொத்துக்கள் இருப்பின் அதன் மூலம் வரும் வருமானம் அல்லது இதர சொத்துக்கள் ஏதும் இல்லை என்றால் அதற்கு ஆதாரமான வருவாய் துறையைச் சார்ந்த வட்டாட்சியரிடத்தில் உரிய சான்றிதழைப் பெற்று தவறாமல் இணைக்க வேண்டும். |
| | 2. இதர வருமானம் என்ற தலைப்பில் கணக்கெடுக்கும் போது தந்தையோ அல்லது தாயோ வேறு பணியில் இருப்பின் அந்த வருமானத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். |

... 2 ...



| | | |
|---|---|---|
| 5. | தந்தை / தாய் / முழு வீட்டு முகவரி அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் / கைப்பேசி எண் | |
| 6. | விண்ணப்பதாரரின் பிறந்த தேதியும் வயதும்<br><br>(பிறப்புச் சான்றிதழ் உள்ளவாறு) | |

6. விண்ணப்பதாரரின் படிப்புப் பற்றிய விவரமும், கல்வி பயிலும் கல்வி நிறுவனத்தின் விவரமும்

| பல்கலைக் கழகத்தின் பெயர் | கல்வி நிறுவனத்தின் பெயர் | தற்சமயம் பயிலும் வகுப்பும் பாடமும் | சென்ற ஆண்டு நடந்த பொது தேர்வில் எல்லா பாடங்களிலும் நிலுவையின்றி தேர்ச்சி |
|---|---|---|---|

| | | | பெற்றுள்ளாரா?<br><br>(நகல் இணைக்கப்பட வேண்டும்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | |

8. விண்ணப்பதாரர் இந்த படிப்புதவித் தொகையைத் தவிர வேறு படிப்புதவித் தொகை அல்லது இதர கல்விச் சலுகை பெறுகிறாரா?
(ஆம் எனில் அதன் முழு விவரம்)

9. 202 …………….. 202…………………….. ஆண்டிற்கான கல்விச் செலவினங்கள் பற்றிய விபரங்கள்.
(கல்விக் கட்டணச் சான்று இணைக்கப்பட வேண்டும்)

(அ) கல்விப் போதனைக் கட்டணம் ....................................................,

(ஆ) இதர கட்டணங்கள் ....................................................

**உறுதிமொழி**

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறோம்.

1. மாணவனின் கையொப்பம் –
2. தந்தையின் கையொப்பம் –
3. தாயின் கையொப்பம் –

இருப்பிடம் :

தேதி :

குறிப்பு : உறுதிமொழியில் அனைவரின் கையொப்பமும் தவறாமல் பெறப்பட வேண்டும்.

... 3 ...

இணைப்பு – 1

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்லூரி / தொழில் நுட்பப் பயிலகம் பெயர் மற்றும் படிக்கும் வகுப்பு மற்றும் ஆண்டு | : | |
| 2. | கல்லூரி / தொழில் நுட்பப் பயிலகம் இணைக்கப்பட்டு உள்ள பல்கலைக் கழகத்தின் பெயர் அல்லது அரசுத் துறையின் பெயர் | | |
| 3. | இந்த கல்வி நிறுவனம் தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் குறிப்பிட வேண்டும். | | |
| 4. | தற்போது பயிலும் ஆண்டு வகுப்பு | | |
| 5. | நிலச் சொத்து (அ) இதர வருமானங்களுக்கு வட்டாட்சியர் வருமான சான்று இணைக்கப்பட வேண்டும். இல்லையென்றால் இல்லையென்ற சான்றினை வட்டாட்சியரிடமிருந்து பெற்று இணைக்கப்பட வேண்டும். | | |
| 6. | ஓய்வூதியம் பெறுபவராயின் அந்த ஓய்வூதியம் தொகைக்கு அரசு கருவூலகத்திலிருந்து சான்று இணைக்கப்பட வேண்டும். | | |
| 7. | விண்ணப்பதாரர் ஆசிரியர் தேசிய நல நிதி நிறுவனத்தின் மூலம் முந்தைய ஆண்டு படிப்புதவித் தொகை பெற்று இருப்பின், பள்ளிக் கல்வி இயக்குநர் செயல்முறைகளில் எண்ணும், நாளும் குறிப்பிட வேண்டும். | | |
| 8. | நடந்து முடிந்த ஆண்டு / ஆண்டுகளில் நடைபெற்ற தேர்வுகள் மற்றும் தேர்ச்சிகளின் விவரங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பாடங்கள் நிலுவை இருப்பின் அதன் விவரத்தையும் தெளிவாக குறிப்பிட வேண்டும். மதிப்பெண் சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும். | | |
| 9. | விண்ணப்பதாரர் பயிலும் பட்ட / பட்டய வகுப்பின் மொத்த கால அளவு | | |
| 10. | விண்ணப்பதாரர் பயிலும் பட்ட / பட்டய வகுப்பு முடிவடையும் ஆண்டு / மாதம் (சரியாக) | | |
| 11. | விண்ணப்பதாரர் பயிற்சி கால உதவித் தொகை (Stipend) பெறுபவராயின் அதன் விவரம் | | |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன்.

கல்லூரி முதல்வரின் கையொப்பம் அலுவலக முத்திரையுடன் (with office Seal)

மாணவரின் தந்தை / தாய் கையொப்பம்

விண்ணப்பதாரரின் தந்தை / தாய் பணியாற்றும் / பணிபுரிந்த பள்ளி தலைமையாசிரியரின் குறிப்புரை

1. செல்வன் / செல்வி ……………………………………………………………………………….. மாணவனின் / மாணவியின் தந்தையாகிய / தாயாகிய திரு / திருமதி ……………………………………………………………………… என்ற ஆசிரியர் அரசு கல்வித் துறையில் ……………………………………………………………………… பள்ளியில் பணிபுரிகிறார் / ……………………………………………………………………… பள்ளியிலிருந்து பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார் / ……………………………………………………………………… பள்ளியில் பணிபுரியுங்கால் மறைந்தவர் என்பதற்கு சான்றளிக்கிறேன்.

2. ஊதியச் சான்று

   a. அடிப்படை ஊதியம் –
   b. அகவிலைப்படி –
   c. வீட்டு வாடகைப்படி –
   d. மருத்துவப்படி –
   e. இதர படிகள் –

   மொத்தம் –

மேலும் விண்ணப் படிவத்தில் கலம் 2 மற்றும் 3ல் குறிப்பிட்டுள்ள ஊதியம் சார்பான விவரங்கள் சரிபார்க்கப்பட்டு சரியாக உள்ளன என்பதற்கும் சான்றளிக்கிறேன்.

பள்ளியின் பெயர் மற்றும்
அலுவலக நாளிட்ட முத்திரையுடன்
(with office date and seal)

தலைமையாசிரியர் /
உயர் அலுவலரின் கையொப்பம்
(அலுவலக முத்திரையுடன்)

படிப்புதவித் தொகை விண்ணப்பத்தினை பரிந்துரை செய்யும்
கல்லூரி / தொழில் நுட்ப கல்லூரி முதல்வரின் குறிப்புரை

திரு. ……………………………………………………………………………………… என்ற ஆசிரியரின் மகனாகிய / மகளாகிய செல்வன் / செல்வி ……………………………………………………………………………………………………….. கல்லூரியில் / தொழில் நுட்பக் கல்லூரியில் ………………………………….. ஆண்டு 202 …………. 202 …………….ல் பயிலுகிறார் (தொழிற் பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பின் விவரம் அளிக்கப்பட வேண்டும்) இம் மாணவன் / இம் மாணவி இந்தப் படிப்புதவி தொகையைப் பெற தகுதியுடையவராகிறார்.

இவ்விண்ணப்ப படிவம் பக்கம் 2ல் உள்ள 6, 7, 8 & 9 கலங்களுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் ஆராயப்பட்டு சரியாக உள்ளன என்பதற்கும் சான்றளிக்கிறேன்.

இம் மாணவன் / மாணவி எந்த வகுப்பிலும் நிறுத்தி வைக்கப்படவில்லை (Not Detained) என்பதற்கும், வேறு எந்தவிதமான படிப்புதவித் தொகையோ / இதர கல்விச் சலுகையோ பெறவில்லை என்பதற்கும் சான்றளிக்கிறேன்/.

மேலும், இம்மாணவன் / மாணவி முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் நிலுவையின்றி (Arrears) தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதற்கும் சான்றளிக்கிறேன்.

கல்லூரி / தொழில் நுட்பக் கல்லூரி
முதல்வரின் கையொப்பம்
(அலுவலக முத்திரையுடன்)

பெயர் :

பதவி :

கல்லூரி / தொழில் நுட்பக்
கல்லூரியின் பெயர் மற்றும்
அலுவலக நாளிட்ட முத்திரையுடன்
(With Office Date Seal)

இருப்பிடம் :

தேதி :

குறிப்பு : விண்ணப்பத்தில் கலங்கள் **6** முதல் **9** முடிய உள்ள விவரங்களுக்கு கல்லூரி முதல்வரால் சான்றளிக்கப்படவில்லையென்றால் இவ்விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.